Registered at the G. P. O. as a Newspape

விசேஷ தேர்தல் அனுபந்தம் விலை சதம் 10

# ஈழநாடு

ஈழநாடு
ஆண்டுச் சந்தா
ரூபாய் 10-00
தனிப்பிரதி
சதம் 20

தேசிய வார இதழ்

யாழ்ப்பாணம், விகாரி, பங்குனி 8- ஆம் நாள். ரம்ளான் பிறை 22 (21-3-60) திங்கட்கிழமை

# டட்லி புதிய பிரதமர்?

ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு பங்குனி மீ 8 உ (21-3-60)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.

## மக்களின் தீர்ப்பு

தமிழரசுக்கட்சியினருக்கு வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் அமோகமான ஆதரவு கிடைத்துள்ளது. பொது மக்களின் நம்பிக்கையையும் அபிமானத்தையும் இவ்வளவு தூரம் பெறத்தக்க வகையில், கட்சிக்குத் தலைமை வகித்து நடத்தியுள்ள திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களைப் பாராட்டுகின்றோம்.

தேர்தலில் வெற்றி பெற்றதும் திரு. செல்வநாயகம் அவர்கள் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், "நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றேன். உங்களுக்குச் செய்ய வேண்டிய பதில் உபகாரம், உண்மையுடனும் நேர்மையுடனும் அரசியலில் செயல் ஆற்றுவதே" என்று கூறி "எமது இனத்தின் விடுதலைக்கு, எமது கட்சியின் ஏனைய பிரதிநிதிகளுடன் சேர்ந்து உழைப்பேன்" என்றுஉறுதி கூறியுள்ளார்.

ஈழத்தில் தமிழ் இனம் இன்று மிகவும் தாழ்ந்த நிலைமையில் இருக்கின்றது. இச்சமூகம் சென்ற நான்கு ஆண்டுகளில் பட்டுள்ள கஷ்ட நஷ்டங்களை நாம் இங்கு விளக்கத் தேவையில்லை. ஈழத்திலுள்ள தமிழ்பேசும் சமூகத்திலே சுமார் பாதிப்பேர் சாதாரண மக்களுக்குரிய பிரஜா உரிமையும் இழந்து நிர்க்கதியாக நிற்கின்றூர்கள்.

ஜனநாயக அமைப்பிலே, பெரும்பான்மையோரிடமே ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப்படுவதாலும், இலங்கை அரசியலிலே, பெரும்பான்மைச்சமூகமே, நிரந்தரமான பெரும்பான்மை அரசியல் கட்சியாக மாறிவந்துள்ளதாலும், சென்ற சில ஆண்டுகளில் தமிழ்ச் சமூகம் பல இன்னல்களுக்கும் சிறுமைகளுக்கும் உட்பட வேண்டியதாயிற்று.

ஐம்பதுக்கு ஐம்பது என்று இருந்தால்தான் சிறுபான்மை சமூகங்களுக்கு ஏதும் பாதுகாப்பு கிடைக்க முடியுமோ என்றும் ஒரு சமயம் இச்சமூகத் தலைவர்களில் சிலர் கருதினர். ஆனல் இன்றே, 151 பேரடங்கிய சபையிலே தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதிகள் சுமார் 25 தான். ஆகவே இச்சபைக்கு தங்கள் பிரதிநிதிகளை அனுப்புவதிலே ஏதும் நன்மையுண்டோ, அவர்கள் என்ன செய்ய முடியும்? என்று ஏக்கம் கொள்ளும்படியாகவும் இருக்கிறதென்று நமது அரசியல் நிருபர் எழுதியிருந்தார்.

ஆனல் எதிர் பாராத முறையிலே, தெய்வாதீனம் தானே என்னவோ, இந்தப் பொதுத்தேர்தலின் முடிவுகள், தமிழரசுக் கட்சி பிரதிநிதிகளை மிகவும் கேந்திரமான முக்கிய ஸ்தானத்தில் இலங்கை பொதுமக்கள் வைத்திருக்கிறூர்கள்.

அதாவது சென்ற முறை போல் இல்லாமல், எந்தச் சிங்களக் கட்சிக்கும் தனித்து மந்திரிசபை அமைக்கக்கூடிய "மெஜாரிட்டி" பலத்தை பொது மக்கள் அளிக்க மறுத்துவிட்டார்கள். யு. என். பியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அநேகமாக சரிசமமான ஸ்தானங்களைப் பெற்றிருப்பினும் இரண்டும், தனித்து ஒரு மந்திரி சபையை அமைக்க முடியாது.

இவ்விரு போட்டிக் கட்சிகளும் மந்திரிசபை அமைக்க வேண்டுமாயின், 15 பேர்களடங்கிய தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவ்விரண்டுக்கும், தமிழரசுக் கட்சியும் இடதுசாரியல்ல. இலட்சியக் கொள்கையைப்பற்றிய தடைகள் எதுவும், இக்கட்சிகள் ஒத்துழைப்பதற்குக் குறுக்கே நிற்கவில்லையாதலால், இவ்விரு கட்சிகள் இரண்டுமே, தமிழரசுக் கட்சியின் ஆதரவை, இதுவரை என்றுமிருந்ததையும்விட அதிகமாக எதிர் பார்க்க வேண்டிய விசேஷமான நிலைமை இத் தேர்தல் மூலம் ஏற்பட்டிருக்கிறது.

தமிழரின் ஒத்துழைப்பைப் பெருமல், வகுப்புவாதமுறையில் காரியங்கள் செய்தால் நாட்டின் நிலைஎன்னகதியாகியுள்ளதென்பதைதேர்தல்மூலம் இரு பெரியகட்சிகளாக வந்துள்ள யு. என். பி, ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சித் தலைவர்கள் நன்குணர்வர். ஆகவே, தங்களது பழைய வகுப்புவாத மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியத்தை, தங்கள் நன்மையை முன்னிட்டாயினும் அவர்கள் உணரலாம். இச்சமயத்தில் வகுப்புசமரசத்தையும் நாட்டின் அமைதியையும் வேண்டி நிற்பதாகக் கூறும் அவ்விருகட்சிகளும் தமிழருக்குத் தாங்கள் இழைத்துவிட்ட அநீதிகளை நீக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து, அதற்குத்தக்க தாராளமனப்பான்மை காட்டிவிட்டுக் கொடுத்தால், இந்நாட்டில் சிங்கள-தமிழ் ஒற்றுமை ஏற்படவும், இலங்கை மாதாவின் இருகண்கள்போன்ற இரு சமூகத்தாரும் சேர்ந்து ஒருதாய்வயிற்றில்பிறந்த சகோதரர் போல் வாழவும் கூடியகாலம் அண்மையில் ஏற்பட்டுவிடலாம்.

## கவர்னர் ஜெனரல் அழைப்பு

திரு. டட்லி சேனநாயகாவை புதிய மந்திரிசபையை அமைக்குமாறு கவர்னர் ஜெனரல் சர்ஒலிவர் அழைத்துள்ளார் என்று தெரிகிறது.

தேர்தல் முடிவுகளின் படி, ஐக்கிய தேசியக் கட்சி (யு. என். பி.) தான் மற்றக் கட்சிகளைவிட அதிகமான ஸதானங்களைப் பெற்றுள்ளது. 151 பேர்களடங்கிய சபையில் யு. என். பிக்கு 50 ஸதானங்கள் கிடைத்துள்ளன.


ஆனல் பிறரது உதவியில்லாமல் யு. என். பி. மந்திரிசபை அமைக்க முடியாது.

டட்லி, 'வேறு கட்சிகளுடன் கூட்டு மந்திரிசபையை அமைக்க மாட்டேன்,' என்று தேர்தலுக்கு முன்பு அறிவித்தார். அந்தப் பேச்சின்படி அவர் நடப்பதாயின், தமக்குப் பிரதம மந்திரிப் பதவி வேண்டாமென்று மறுக்கக்கூடும்.

அவர் இந்தக் கருத்தை இதற்கிடையில் மாற்றிக்கொள்ளலாம். அப்படியாயின் அவருடன் எந்தக் கட்சி ஒத்துழைக்க முன்வரும்? தமிழரசுக் கட்சிக்கும் டட்லிக்கும் தப்பபிப்பிராயங்கள் பல உண்டு. அவை நீக்கப்பட்டால் இரு கட்சிகளும் ஒத்துழைப்பது சாத்தியம். ஆனல் அப்படி ஒத்துழைத்தாலும், 'மெஜாரிட்டி'க்கு வேண்டிய ஆகக் குறைந்த 76 ஸ்தானங்கள் கிடைக்க, வேறும் சிலரை டட்லி பிடிக்க வேண்டியிருக்கும். இதற்குப் பதில் அவர், ஒன்று எதிர்க்கட்சியில் இருக்கலாம் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு சேரலாம். அப்படிச்சேர்ந்தால், பலமான 'மெஜாரிட்டி' பலம் கிடைக்க முடியும்.

### சேர் ஜோன்

சேர்ஜோன் இனி கூடிய சீக்கிரம் கவர்னர் ஜெனரலாவாரென்றும், அவருக்கும், ஸ்ரீமதி பண்டார நாயக்காவுக்கும் நல்லுறவு இருப்பதால், சேர் ஜோன் மூலம், இரு கட்சிகளையும் சேர்க்கும் முயற்சி நடக்கலாம். பண்டாரநாயக்காகொலை செய்யப்பட்டதும், சேர்ஜோனை அக்கட்சிக்குத் தலைமை வகிக்குமாறு அக்கட்சி பிரமுகர்கள் கேட்டனர். ஆனல் அவர் மறுத்துவிட்டார், என்றூலும், ஐ. தே கட்சிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொது நண்பர் சர் ஜோன். ஆகவே அவர் மூலம் இரு கட்சிகளையும் பிணைக்க முயற்சிகள் இதற்கிடையே நடக்கலாமென்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.



### தமிழரசுக் கட்சி

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்பை நாடுவதும் சாத்தியம்.

ஆனல் தமிழரசுக் கட்சி மொழி முதலிய பிரச்சினைகள் தீராத நிலையில், எந்த அரசாங்கத்துடனும் சேருமா? சேராவிடில் ஒத்துழைக்க

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## தேர்தல் முடிவான நிலை

| கட்சிகள் | போட்டியிட்டவை | வெற்றி பெற்றவை |
|---|---|---|
| யு. என். பி | 127 | 50 |
| எஸ். எல். எவ். பி | 108 | 46 |
| தமிழரசு | 19 | 15 |
| எல். எஸ். எஸ். பி | 101 | 10 |
| எம். ஈ. பி | 89 | 10 |
| எல். பி. பி | 98 | 4 |
| ஸி. பி | 53 | 3 |
| தமிழ்க் காங்கிரஸ் | 8 | 1 |
| மற்றவை | 125 | 4 |
| சுயேச்சை | 163 | 8 |
| வாபஸ்பெற்றவர்கள் | 4 | |
| மொத்தம் | 895 | 151 |

# பார்லிமெண்ட் தேர்தல் முடிவுகள் விபரம்

### தொகுதி 1
## கொழும்பு வடக்கு
வாக்காளர் தொகை: 29,434

| | |
|---|---|
| வி. ஏ. சுகததாச (யு.என்.பி.) | 9446 |
| திருமதி விவியன் குணவர்த்தன (எல். எஸ். எஸ். பி.) | 8602 |
| கே. வி. சிரிபால பெரேரா (எஸ். எல். எப். பி) | 3149 |
| அன்ட்ரு எம். ஜி. டி' சில்வா (எல். பி. பி.) | 1161 |
| இ. நெல்சன் பெர்ணண்டோ (சு) | 188 |
| கே. ஜே. எஸ். ஏ. பெர்ணண்டோ (எஸ். எம். பி.) | 52 |
| மொத்தம்: | 22598 |
| அதிகப்படி: | 844 |

### தொகுதி 3
## பொரலே
மொத்த வாக்காளர் 24,423

| | |
|---|---|
| டாக்டர் ஆர்.பி லெனேரா யு. என். பி.) | 7261 |
| டபிள்யு டி' சில்வா (எஸ். எல். எப். பி.) | 5502 |
| எச். ஏ. டி. எஸ். குணசேகர (எல். எஸ். எஸ். பி.) | 3914 |
| எம். எஸ். அபூபக்கர் (எம் ஈ. பி.) | 3478 |
| பி. எச். எஸ். ஜயவர்த்தன (எஸ். எம். பி.) | 76 |
| எச். லோரன்ஸ் பெரேரா (இ. சு. கா.) | 56 |
| மொத்தம்: | 20287 |
| அதிகப்படி: | 1759 |

### தொகுதி 35:
## மாத்தளை
வாக்காளர் தொகை: 20,739

| | |
|---|---|
| பி. எச். அலுவிகார [யு. என். பி.] | 8022 |
| ரி. டி. குணரத்ன [எஸ். எல். எவ். பி.] | 6113 |
| எம். பி. ரட்ணயக்கா [எம். ஈ. பி.] | 802 |
| ஏ.சுமணபாலா [எல்.பி.பி.] | 154 |
| எல். டபிள்யு. ஜே. விக்ரமசூரிய [சு] | 117 |
| எஸ.பி.விஜயரட்ன [ஸி.பி.] | 504 |
| எம். யு. கெப்பிட்டிபொல [யூ. பி.] | 113 |
| மொத்தம்: | 15915 |
| அதிகப்படி: | 1909 |

### தொகுதி 42
## கண்டி
வாக்காளர் தொகை 18,252

| | |
|---|---|
| இ. எல். சேனநாயக்க [யூ. என். பி.] | 6924 |
| டக்டர் டபிள்யு. எஸ். கருணரத்ன [எம். ஈ. பி.] | 5800 |
| எச். ஏ. சி. விக்ரமரத்ன [சு. சோ.] | 950 |
| எம். எல். கூரே [எல். பி. பி.] | 173 |
| மொத்தம்: | 13347 |
| அதிகப்படி: | 1624 |

### தொகுதி 85
## மன்னர்
வாக்காளர் தொகை 19,936

| | |
|---|---|
| ஏ. வி. அழகக்கோன் (த. அ. க.) | 6463 |
| ஏ. சி. என். முகமது (சு) | 4587 |
| எஸ். ஜோன் மார்க் (சு) | 2155 |
| மொத்தம்: | 13205 |
| அதிகப்படி: | 1876 |

### தொகுதி 86
## வவனியா
வாக்காளர் தொகை: 18,469

| | |
|---|---|
| டி. சிவசிதம்பரம் (சு.) | 5273 |
| சி. சுந்தரலிங்கம் (ஈ. த. ஒ. மு.) | 4231 |
| பி. முத்தையா (சு) | 1467 |
| எஸ். சுப்பிரமணியம் (த. அ. க.) | 133 |
| மொத்தம் | 12408 |
| அதிகப்படி | 1139 |

### தொகுதி 43
## செங்கடகல
வாக்காளர் தொகை: 16,550

| | |
|---|---|
| என். விமலசேன [யூ. என். பி] | 5831 |
| பி. தென்னகூன் [எம். ஈ. பி.] | 4674 |
| டி. டபிள்யு. டி. கே. கமகே [எஸ். எல். எப். பி.] | 1408 |
| டாக்டர் எஸ. பெத்தியாகொட [சு] | 118 |
| மொத்தம்: | 12031 |
| அதிகப்படி: | 1151 |

### தொகுதி 62
## காலி
வாக்காளர் தொகை: 28,369

| | |
|---|---|
| டபிள்யு. டி. எஸ். அபய குணவர்தன (யு என் பி) | 10480 |
| டபிள்யு தகநாயக (எல் பி பி) | 9997 |
| வி. விஜயநாயக்க [ஸி பி] | 411 |
| இ.டபிள்யு ஜே. செரசிங்க [எஸ் எல் எப் பி] | 250 |
| ஏ. எம். இஸ்மாயில் [எஸ் எம் பி] | 139 |
| மொத்தம்: | 21277 |
| அதிகப்படி: | 483 |

### தொகுதி 69
## மாத்தறை
வாக்காளர் தொகை 30,640

| | |
|---|---|
| சி.ஜஸ்டின் விஜயவர்தன [யு என் பி] | 8409 |
| எம். சமரவீர [எஸ் எல் எப் பி] | 6533 |
| வி. பி. டுடாவே [ஸி. பி. | 5702 |
| கே. கே. டி' சில்வா [எல் பி பி] | 2151 |
| டி. குமரபெருமா [எஸ் எம் பி] | 204 |
| மொத்தம்: | 22999 |
| அதிகப்படி: | 1876 |

### தொகுதி 39
## கலகெதர
வாக்காளர் தொகை 18,060

| | |
|---|---|
| சி. ஏ. எஸ். மரிக்கார் (எஸ். எல். எவ். பி.) | 4493 |
| ஏ. பி. வல்கம்பாய (யூ. என். பி.) | 3833 |
| கே. அப்துல் ஜபார் (சு) | 2897 |
| எச் எம் டி பெரேரா [எல் பி பி] | 1373 |
| டி' என் நாதுங்கே (ஸி. பி.) | 1312 |
| ஜி. அபயக்கோன் (எம். ஈ. பி.) | 1265 |
| மொத்தம்: | 15173 |
| அதிகப்படி: | 660 |

### தொகுதி 112
## அனுராதபுரம்
வாக்காளர் தொகை: 19,067

| | |
|---|---|
| எஸ கொடகே எஸ் எல் எப் பி | 5922 |
| டி பி பி மஹதியுலுவேல யு என் பி | 3570 |
| கோகன்தாஸ டி மெல் எம் ஈ பி | 941 |
| ஜே ஏ ஹேரத்பண்டா சு | 646 |
| ஏ குணசேகர ஸி பி | 526 |
| ஆர் எல் எச் ஜயசேகர சு | 184 |
| டபிள்யூ பி அமுனுகம எல் பி பி | 74 |
| மொத்தம்: | 11863 |
| அதிகப்படி: | 2352 |

### தொகுதி 82
## பருத்தித்துறை
வாக்காளர் தொகை 19,408

| | |
|---|---|
| கே துரைரத்தினம் (த. அ. க.) | 5679 |
| எஸ். நடராஜா (த. கா.) | 2521 |
| டி. ஜெயதேவன் (எல். எஸ். எஸ். பி.) | 2101 |
| திருமதி கே. சிவக்கொழுந்து (சு) | 1552 |
| எஸ். சுந்தரலிங்கம் (சு) | 1226 |
| கே. சேனாதிராஜா (ஸி. பி.) | 1000 |
| மொத்தம்: | 15,079 |
| அதிகப்படி: | 3158 |

### தொகுதி 61
## அக்மீமன
வாக்காளர் தொகை: 31,384

| | |
|---|---|
| எஸ. சமரசேகர [எல் பி பி] | 11,815 |
| எச். டபிள்யு அமரசூரிய [யு என் பி] | 8553 |
| பி. வை. விக்ரம [எம் இ பி] | 2635 |
| சி. ஜே. செனவிரத்ன [ஸி பி] | 607 |
| டி ஆர் வனிகரத்ன [எல் எஸ எஸ பி] | 379 |
| டி. எச். தர்மதாச [சு] | 292 |
| பி. குலசிங்க [சு] | 201 |
| மொத்தம்: | 24381 |
| அதிகப்படி: | 3262 |

### தொகுதி 37
## வத்துகாமம்
வாக்காளர் தொகை 20,093

| | |
|---|---|
| பி. பி. ஏ. வீரக்கூன் [எஸ. எல். எப். பி. | 8680 |
| ஏ. ரட்ணயக்க [யு. என். பி.] | 7110 |
| வி. தர்மவர்தன [எம். ஈ. பி.] | 399 |
| மொத்தம்: | 16,189 |
| அதிகப்படி | 1570 |

### தொகுதி 41
## உடுனுவர
வாக்காளர் தொகை 20,231

| | |
|---|---|
| டி. பி. ஜயசுந்தர [எஸ். எல். எவ் பி.] | 7650 |
| டி. பி. பானபொக்கே [ஜூனியர்]யூ. என் பி. | 7081 |
| பி. பி. விஜயசிங்க [எம். ஈ. பி.] | 932 |
| சி. ஏ. சி. மரிக்கார் [எல் பி. பி.] | 929 |
| ஏ. எச். கலமுவா [யு. பி.] | 89 |
| மொத்தம் | 1668 |
| அதிகப்படி: | 569 |

### தொகுதி 64
## வெலிகமை
வாக்காளர் தொகை: 37,119

| | |
|---|---|
| மொன்டேகு ஜயவிக்ரம (யு என் பி) | 14,270 |
| பாணி இலங்ககூன் (எஸ எல் எப் பி) | 10,240 |
| பி. விக்ரமரட்ண (ஸி பி) | 1,409 |
| டி. பி. ஜே.நாணயக்கார (எஸ எம் பி) | 471 |
| ஜி.பி.டி.எஸ. ஜயவர்தன (எல் பி பி) | 447 |
| ஏ.ஜி.பியசிங்க [இ சு கா] | 128 |
| மொத்தம்: | 26965 |
| அதிகப்படி: | 4030 |

## உடுவில்

| | |
|---|---|
| வி. தர்மலிங்கம் (த. அ க.) | 9033 |
| பி. நாகலிங்கம் (எல். எஸ். எஸ். பி) | 2811 |
| வி.பொன்னம்பலம்(ஸி.பி) | 3541 |
| ஜே. டி. ஆசீர்வாதம் (சு) | 1552 |
| எச். பேரின்பநாயகம் (சு.) | 1241 |
| என். சிவனேசன் (சு) | 1008 |
| என். வீரசிங்கம் (சு) | 312 |
| மொத்தம்: | 20498 |
| அதிகப்படி: | 5222 |

## காங்கேசன்துறை
வாக்காளர் தொகை 2[illegible],473

| | |
|---|---|
| எஸ். ஜே. வி. செல்வநாயகம் (த. அ. க.) | 13, 545 |
| வி. காராளசிங்கம் (எல். எஸ். எஸ். பி.) | 5042 |
| ஆர். என். சிவப்பிரகாசம் (த. கா.) | 1448 |
| மொத்தம்: | 20035 |
| | 8503 |

## பட்டிருப்பு
வாக்காளர் தொகை: 19,429

| | |
|---|---|
| எஸ். எம். ராசமாணிக்கம் (த. அ. க.) | 10,799 |
| எஸ். யூ. எதிர்மன்னசிங்கம் (த. பே. மு.) | 6516 |
| மொத்தம்: | 17312 |
| அதிகப்படி: | 4287 |

## டெடிகம
வாக்காளர் தொகை 29,061

| | |
|---|---|
| டட்லி சேனநாயக்கா [யு என் பி] | 10208 |
| முனிசிங்க [எஸ் எல் எவ் பி] | 5629 |
| செனிவிரத்ன [எல் எஸ எஸ பி] | 4383 |
| எம். ஹெரத் [எம் ஈ பி] | 2280 |
| மொத்தம் | 22500 |
| அதிகப்படி | 6579 |

### தொகுதி 73
## திஸஸமகராம
வாக்காளர் தொகை 32,024

| | |
|---|---|
| எல் ராஜபக்ஸ [எம் ஈ பி] | 10,665 |
| சி டபிள்யு எம் எதிரிசூரிய [எஸ் எல் எப் பி] | 7253 |
| டபிள்யு பி வீரரட்ன [இ சு கா] | 2108 |
| ஆர் ஜி டபிள்யு நிலவீர [யு என் பி] | 1660 |
| டி செரசிங்க [சு] | 1057 |
| ஏ விக்ரமசூரிய [எல் பி பி] | 754 |
| இ ஜி விஜயசிங்க [எஸ் எம் பி] | 291 |
| மொத்தம் | 23788 |
| அதிகப்படி | 4412 |

### கொகுதி 109
## குருநாக்கல்
வாக்காளர் தொகை: 24, 864

| | |
|---|---|
| டி பி முனக்குளமே எஸ எல் எப் பி | 8186 |
| டேமியன் ஏ ரத்னயக்க யு என் பி | 6684 |
| ஸி பி | 1279 |
| பி ஆர் விக்ரமசூரிய எம் ஈ பி | 781 |
| ஏ எல் ஷெரீப் சு | 630 |
| டபிள்யூ டபிள்யூ பிரேமரட்ன எல் பி பி | 595 |
| எச் எல் பிரேமதாச | |
| பி ஜே ஏ பண்டா எஸ எம் பி | 184 |
| மொத்தம்: | 18339 |
| அதிகப்படி: | 1502 |

### தொகுதி 75
## வட்டுக்கோட்டை
வாக்காளர் தொகை: 28,955

| | |
|---|---|
| ஏ.அமிர்தலிங்கம்(த.அ.க) | 11524 |
| எஸ். சுந்தரசிவம் (எல். எஸ். எஸ். பி.) | 3614 |
| ஏ.வயித்திலிங்கம்(ஸி.பி.) | 3180 |
| பி. எம். சங்கரப்பிள்ளை (த. கா.) | 2955 |
| சி. இரத்தினசபாபதி (சு) | 260 |
| மொத்தம்: | 21533 |
| அதிகப்படி: | 7910 |

### தொகுதி 40
## யட்டினுவர
வாக்காளர் தொகை 20,983

| | |
|---|---|
| சுனில் எஸ். அபயசுந்தர (யூ. என். பி.) | 4352 |
| எச். கொபேகடுவ (எஸ். எல். எவ். பி.) | 4159 |
| டி. டி. விஜயதுங்க [சு] | 3156 |
| எஸ். சங்ககார [எம். ஈ. பி.] | 2134 |
| எஸ். டபிள்யு. ராஜபக்ஸ [ஸி. பி.] | 1372 |
| (டி. கே. ஆரியசிங்க எல். எஸ். எஸ் பி. | 953 |
| ஆர். குணசேகர (யு. பி.) | 246 |
| மொத்தம்: | 16372 |
| அதிகப்படி: | 193 |

### தொகுதி 83
## சாவகச்சேரி
வாக்காளர் தொகை 25,882

| | |
|---|---|
| வி. என். நவரத்தினம் (த. அ. க.) | 13,907 |
| வி. குமாரசாமி (த. கா.) | 6930 |
| ஏ. எஸ். கனகரத்தினம் (எல். எஸ். எஸ். பி.) | 432 |
| மொத்தம்: | 21260 |
| அதிகப்படி: | 6977 |

### தொகுதி 119
## பொலன்னறுவை
வாக்காளர் தொகை 17,654

| | |
|---|---|
| ஏ. எச். டி' சில்வா [எஸ எல் எப் பி] | 7107 |
| பி. எல். பௌத்தசார [யு என் பி] | 3991 |
| கே. ஏ. எல். விஜயசிங்க [எல் எஸ எஸ பி] | 989 |
| பி. பி. யாபா [எம் ஈ பி] | 438 |
| ஏ. சூர்யாராட்சி [எல் பி பி] | 412 |
| வை. டபிள்யு. பீரிஸ் (எஸ ஜே எஸ] | 107 |
| மொத்தம் | 13024 |
| அதிகப்படி | 3126 |

### தொகுதி 138
## கிரியெல்லே
வாக்காளர் தொகை 26,106

| | |
|---|---|
| ஏ. இ. பி. கிரியெல்லே [யு என் பி] | 6816 |
| பி. பி. விஜயசிந்தர [எல் எஸ எஸ பி] | 5270 |
| டபிள்யு எல் டி' ஜயவர்தன [எஸ எல் எம் பி] | 4654 |
| திருமதி கே. குணவர்தன [எம் ஈ பி] | 3906 |
| எச். அத்தநாயக்க [எல் பி பி] | 131 |
| மொத்தம் | 20777 |
| அதிகப்படி | 1546 |

### தொகுதி 110
## மாவத்தகம
வாக்காளர் தொகை: 22, 967

| | |
|---|---|
| ஆர் பி எக்கநாயக்க யு என் பி | 6877 |
| டி பி விக்ரமசிங்க எஸ எல் எப் பி | 6555 |
| எஸ ஜி வனிகசேகரா ஸி பி | 2018 |
| டி டி வைத்தியசேகரர எல் எஸ எஸ பி | 846 |
| பி எஸ ரணசிங்க சு | 672 |
| எஸ பியசேன எம் ஈ பி | 574 |
| ஆர் ஜாரிஸ எல் பி பி | 280 |
| டி என் ஹந்துங்கே எஸ எம் பி | 258 |
| மொத்தம்: | 18180 |
| அதிகப்படி: | 322 |

### தொகுதி 113
## மதவாச்சி
வாக்காளர் தொகை: 16,579

| | |
|---|---|
| மைத்திரிபால சேனநாயக்கா எஸ எல் எப் பி | 9475 |
| எஸ எச் மாதியுலுவேவ யு என் பி | 2133 |
| ஆரிய பத்திரன சு | 580 |
| ஏ இ ஓ வீரசிங்க எல் பி பி | 226 |
| மொத்தம் | 12414 |
| அதிகப்படி | 7342 |

### தொகுதி 53
## நுவரெலியா
வாக்காளர் தொகை: 12, 195

| | |
|---|---|
| டி. வில்லியம் பெர்ணண்டோ [எஸ. எல். எப். பி.] | 2397 |
| பி. மெல்லாராச்சி [யூ. என். பி.] | 1969 |
| எஸ். தொண்டமான் [இ. ஜ. கா.] | 1940 |
| இ. வனிகசேகரா [சு] | 1100 |
| வில்பிரட் டி சில்வா [எல். எஸ. எஸ. பி.] | 843 |
| கே. ஏ. ஆர். பெல்பொல [எல். பி. பி.] | 322 |
| ராஜா செனவிரத்ன [சு] | 320 |
| பீடி. ஜே. டி. ஜினேந்திரபால [ஸி. பி.] | 240 |
| ஹியுபட் மெதகம [யூ. பி.] | 56 |
| மொத்தம்: | 9187 |
| அதிகப்படி: | 428 |

### தொகுதி 22:
## கொட்டாவ
வாக்காளர் தொகை 34871.

| | |
|---|---|
| ரொபேட் குணவர்தன | 10928 |
| டபிள்யு போதிபால [யு. என். பி.] | |
| [எல். எஸ. எஸ. பி.] | 8879 |
| பி. எச். பொத்தேஜு [எஸ. எல். எப். பி.] | 4101 |
| மொத்தம்: | 23908 |
| அதிகப்படி: | 4949 |

### தொகுதி 52
## கொத்தமல்லி
வாக்காளர் தொகை: 16,981

| | |
|---|---|
| ஜே. டி. வீரசேகர [எல் பி. பி.] | 4643 |
| டி. பி. ரணத்துங்க [யு. என். பி.] | 3724 |
| ஏ. திஸஸாநாயக [எஸ. எல். எப். பி.] | 3449 |
| எச். எம். ஹீன்பண்டா [எல். எஸ். எஸ. பி.] | 691 |
| கே. எம். பண்டார [யு. பி.] | 524 |
| மொத்தப்: | 13031 |
| அதிகப்படி: | 919 |

### தொகுதி 93
## கல்முனை
வாக்காளர் தொகை: 17,762

| | |
|---|---|
| கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர் (எல். பி. பி.) | 5743 |
| மன்சூர் மௌலானா (த. அ. க.) | 2520 |
| எம். அகமது (சு) | 1680 |
| எம். ஏ. எல். காரியப்பர் (சு) | 1153 |
| எஸ். டி. காதர் மொகிதீன் (சு) | 219 |
| மொத்தம்: | 14,315 |
| அதிகப்படி: | 223 |

# யு. என். பி; 50 எஸ் எல் எவ் பி 46

தொகுதி 27
**பண்டாரகம**
வாக்காளர் தொகை 37, 279
டி. சி. டபிளியூ. கன்னங்கரா (யூ. என். பி.) 10.154
கே. டி. டி. பெரேரா (எஸ். எல். எவ். பி.) 7031
ஆர். ஏ. கே. பெரேரா (எம். ஈ. பி.) 6027
டி. டபிள்யூ விஜயசூரிய (எல். எஸ். எஸ். பி. 5113
பி. கே. வி. பிரேமரத்ன (ஸி. பி.) 783
ஒஸ்டின் டி. பெரேரா (எல். பி. பி); 634
மொத்தம்: 29742
அதிகப்படி: 3123

தொகுதி 25
**ஹொறன**
வாக்காளர் தொகை: 33, 713
ஆர். விக்ரமநாயக்க [எம் ஈ பி] 15,759
எம். டி. எச். ஜயவர்தன (யூ. என். பி.) 10,649
எச். டி. ஜினதாச (எல். எஸ். எஸ். பி.) 1721
எஸ். டபிள்யூ. எல். பீரிஸ் (எல். பி. பி.) 353
ஜி. என். பெரேரா (சு) 210
மொத்தம்: 28692
அதிகப்படி: 5110

தொகுதி 15:
**தொம்பே**
வாக்காளர் தொகை: 35,999.
ீலிக்ஸ் ஆர். டயஸ் (எஸ். எல்.எப். பி.) 16,227
ஜே.ஏன்.பி.சூரியப்பெருமா (யு. என். பி.) 4186
டி பி வெலிக்கல எம் ஈ பி 3412
டைடஸ் செனரெட்ன (சு)1984
இ. பி. எதிரிசிங்க (எல். எஸ். எஸ் பி.) 1137
ஐ டி ரின்சி (எஸ எம் சி) 1022
எப். ஒபயசேகர (சு) 338
மொத்தம்: 28,306
அதிகப்படி: 12,047

தொகுதி 14:
**மகார**
வாக்காளர் தொகை: 35,120
எஸ். சே. கே. சூரியாராட்சி (எஸ். எல். எப். பி.) 15,098
திருமதி டி. சி. ஜயக்கொடி (யு. என். பி.) 900
எல். பி. அபயவிக்ரம (எம். ஈ. பி.) 1971
ஜே. பி. பி. சிரிவர்தன (எல். எஸ். எஸ். பி.) 1651
திருமதி ஓ அமரசேகர (எல். பி. பி.) 386
ஜே.ஏ.கே.பெரேரா (ஸி.பி.)297
ஆர். ஏ. ரூபசிங்க (எஸ். ஜே. எஸ்.) 186
டி. ஆர். ஜயமன்ன (சு) 147
டி. ஸி. ஜயக்கொடி [சு] 85
மொத்தம் 28823
அதிகப்படி 6096

தொகுதி 102
**சிலாபம்**
வாக்காளர் தொகை 31,364
ஜே சி டபிள்யு முனசிங்க எஸ எல் எப் பி 9302
டி ஆர் ஜயரத்ன சு 4527
பி. பெர்ணண்டோ (யு என் பி] 4364
ஆர் எச் ரங்தெனி எல் எஸ எஸ பி 2843
எம் டி ஜேபெர்னுன்டோ (எல் பி பி) 1978
எம் சி பெர்னுண்டோ [சு] 587
டி எஸ எச் ஜயசேகரா இ சு கா 303
மொத்தம்: 23904
அதிகப்படி: 4775

தொகுதி 34:
**லக்கல**
வாக்காளர் தொகை: 11,000
கே. எம். கே. பண்டா [எஸ். எல். எவ். பி.] 3073
பி. பி. எக்கநாயக்க [யு. என். பி.] 1542
எச். எம். கே. குணத் திலக்க [சு] 1274
டி. பி. யாபா [எம். ஈ. பி.] 871
டி. ஆர். ஏ. சோமரட்ன [எஸ். எம். பி.] 399

கே. ஜி. டபிள்யு சோம சேகர [இ சு கா) 346
டி தேசிங்க [எல்.பி.பி.] 117
சிட்னி தென்னே [யூ. பி.] 57
மொத்தம் 7679
அதிகப்படி 1531

தொகுதி 65
**அக்குரெஸ்ஸ**
வாக்காளர் தொகை: 29,973
டாக்டர். எஸ. ஏ. விக்ரமசிங்க (ஸி பி) 13191
டி. பி. வணிகசேகர (யு என் பி) 10290
கே. எப் ரட்ணசேகரா (எல் பி பி) 870
மொத்தம்: 24351
அதிகப்படி: 2901

தொகுதி 94
**நிந்தாவூர்**
எம். ஐ. எம். ஏ. மஜீத் (சு) 10017
எம். எம். முஸ்தாபா (எல் பி பி) 5390
எம். மிர்சா (சு) 2655
எம். எஸ. காதர் (சு) 215
மொத்தம் 18277
அதிகப்படி 4627

**பொல்காவெல**
டி டபிள்யூ சமரக்கொடி [எஸ எல் எப் பி] 6038
டி பி வெலகெதர [யு என பி] 5901
எஸ முனசிங்க [எம் ஈ பி] 2079
பீ. எஸ. அல்பிரட் [எல் எஸ எஸ் பி] 1841
டி கலுஹெந்தி வெல [சு] 754
கே ஹேமச்சந்திரா [எல் பி பி ] 410
ஏ கலாப்பற்றி [இ சு கா] 407
டி பி பொத்துஹேர [யு பி] 208
டி எம் பாலசூரிய [சு] 168
பி பி சமரசிங்க [எஸ எம் பி] 118
மொத்தம்: 17924
அதிகப்படி 137

தொகுதி 99
**ஹிரியல**
வாக்காளர் தொகை: 24,926
ஏ. எச் சேனநாயக்கா [யு என் பி] 9202
ஏ. எம். குணதிலக்க [எஸ எல் எப் பி]6840
எஸ. எச். ஏ. தர்மசேன [எம் ஈ பி] 683
ஏ. எச். அமுனுகம [எஸ் ஜே எஸ ] 614
ஜி. ஜி. சிரி டி சில்வா [எல் பி பி] 614
யு எம் பெரேரா [எல் எஸ எஸ் பி] 320
கே. எஸ. தர்மசிறி [ஸி பி] 221
மொத்தம்: 18494
அதிகப்படி: 2362

தொகுதி 29
**களுத்துறை**
வாக்காளர் தொகை: 33, 209
சம்லி குணவர்தன [எல். எஸ. எஸ. பி.] 7749
வி. எல். விஜயமன்ன யூ. என். பி. 6984
எட்வேட் டி. கொஸமே [சு] 5566
கே. டபிள்யூ. சில்வா [எஸ. எல். எப்.. பி] 3151
எம். பி. பெரேரா [ஸி. பி.] 1675
எஸ. டி. பி. சேனரட்ன [எல். பி. பி.] 700
கே. எம். விக்ரமசிங்க [சு] 380
மொத்தம்: 26205
அதிகப்படி: 765

தொதி 72
**முல்கிரிகல**
வாக்காளர் தொகை 32,499
ஜி ராஜபக்ஸ [எம் ஈ பி] 13, 533
பி வெளிவிட்டியாகொட [ஸி பி] 5355
டி. சி. அத்தபத்து [யு என் பி] 5001
வை எம் குலத்துங்க [சு] 896
ஜே எம் எம் பண்டார [சு] 632
டி இ தகநாயக்க [எஸ எல் எப் பி] 514
சி ஏ மெத்யூ [எல் பி பி] 326
டி ஏ வீரசிங்க [பி ...] 173

கே. எல். டி. அந்ததிராயஸ் [சு] 135
மொத்தம் 26565
அதிகப்படி 7178

தொகுதி 28
**பாணந்துறை**
வாக்காளர் தொகை: 34, 958
லெஸ்லி குணவர்தன [எல். எஸ். எஸ். பி.] 9266
சரில் சல்காடோ [யூ. என். பி.] 6919
உபாலி டயஸ் [சு] 6519
லயனல் டபிள்யூ குருப்பு [சு[ 2887
அசோகா ஆர். ஜயத்திலக்க [சு] 469
சிரிசோம ஜயசிங்க [எஸ். ஜே. பி.] 302
மொத்தம்: 26362
அதிகப்படி: 2347
சிரிரோம ஜயசிங்கவை கட்சியிலிருந்து விலக்கி விட்டார்கள்.

தொகுதி 89
**கல்குடா**
வாக்காளர் தொகை: 18, 330
பி. மாணிக்கவாசகம் (த. அ. க.) 7318
ஏ. ஐ. மாக்கன் மார்க்கார் (யு என் பி) 5584
வி. நல்லையா (த. பே. மு.) 2182
மொத்தம் 14, 087
அதிகப்படி 1731

தொகுதி 67
**ஹக்மன**
வாக்காளர் தொகை 27,277
ஆர் ராஜபக்ஸ [எம். ஈ. பி.] 9083
விக்டர் ரத்னயக்க [யு. என். பி.] 6884
திருமதி பி. சோமவதி மதியூஸ் (எல். பி. பி.) 2758
சேபால ரத்னயக்க [சு] 1500
டியூடர் வகிஸ்தா [ஸி.பி.] 1318
மொத்தம் 21543
அதிகப்படி 2199

தொகுதி 68
**கம்புருபிட்டிய**
வாக்காளர் தொகை 29927
பி. ஏ. விக்ரமசிங்க [ஸி பி] 9442
ஏ. எம். அபயவர்தன [யு என் பி] 6036
எச். பி. ஜயவர்தன [எஸ். எல். எப். பி.] 4414
எஸ. யாபா [எல் எஸ எஸ பி] 2414
எம். ஜி. சிரியாதாச [எல் பி பி] 315
மொத்தம் 22,621
அதிகப்படி 3400

தொகுதி 66
**தெனியாய**
வாக்காளர் தொகை: 23,459
பி. எல். ஜினதாச (யு என் பி) 6565
சி. என். கன்னங்கரா (எம் ஈ பி) 5586
எஸ. டபிள்யு தகநாயக்க (எஸ எல் எப் பி) 2903
இ. குணதிலக (ஸி பி) 2178
மொத்தம்; 17232
அதிகப்படி: 979

தொகுதி 57
**பெந்தர-எல்பிட்டியா**
வாக்காளர் தொகை: 41,412
ஜி. ஆர். சமரநாயக்க (யு என் பி) 7769
கே. எச். ஜி. அல்பட் (எம் இ பி) 7177
ஹென்ரி அபயவிக்ரம (எஸ எல் எப் பி) 4319
எஸ. ஏ. லெஸலி (சு) 3727
கே விமலபலா ஸி பி 3678
கே. சுரசேன (எல் எஸ எஸ பி) 1622
பி. ஏ. பிரேமதாச (சு) 1141
ஜே. டி. அல்பேட் (சு) 1140
டி. பி. விக்ரமராச்சி (எல் பி பி) 804
எம். டி. குலரத்ன (எஸ ஜே எஸ) 192
ஏ. டி. விஜயரத்ன (எஸ் எம் பி) 180
மொத்தம்: 31749
அதிகப்படி: 592

தொகுதி 120
**மகியாங்கனை**
ஸி. பி. ஜே. செனிவரத்ன [யூ என் பி] 3164


தொகுதி 78
**யாழ்ப்பாணம்**
வாக்காளர் தொகை: 24,299
ஏ டி. துரையப்பா (சு) 6201
ஜி. ஜி. பொன்னம்பலம் (த. கா.) 5312
எஸ். கதிரவேற்பிள்ளை (த. அ. க.) 5101
ஏ விசுவநாதன் (எல். எஸ். எஸ். பி.) 757
மொத்தம்: 17381
அதிகப்படி: 889

தொகுதி 79
**நல்லூர்**
வாக்காளர் தொகை: 26,966
டாக்டர். ஈ.எம்.வி. நாகநாதன் (த. அ. க.) 9601
சி. அருளம்பலம் (த.கா.) 6608
ஏ. துரைராஜசிங்கம் (எல். எஸ். எஸ். பி.) 1870
எம். கார்த்திகேசன் (ஸி.பி) 757
ஆர். சி. மன்மதராயன் (சு) 291
சி. சின்னத்துரை (சு) 224
மொத்தம்: 19, 351
அதிகப்படி: 2842

தெகுதி 74
**ஊர்காவற்றுறை**
வாக்காளர் தொகை: 25,616
வி. ஏ. கந்தையா (த.அ.க.)10820
ஏ. எல். தம்பிஐயா (சு) 7574
வி. எல். நல்லதம்பி (எல். எஸ். எஸ். பி.) 719
அதிகப்படி: 3246



திரு ஏகாம்பரம்



ஜனுப் முகம்மது அலி

தொகுதி 88
**மூதூர்**
(இரு பிரதிநிதிகள்)
டி. பி. ஏகாம்பரம் (த. அ. க.)
எம் ஈ. எச். முஹம்மது அலி (சு)

**பதுளை**
பி. எச். பண்டார [எஸ. எல் எப். பி.] 4775

**வெலிமடை**
கே எம் பி ராஜரத்ன [ஜே வி பி] 6539

**பண்டாரவளை**
ஜே டி குணசேகர [எ எல் எவ் பி] 5603

**அப்புத்தளை**
டபிள்யு பி ஜி ஆரியதாச [எஸ எல் எப் பி] 3655

**கலிகொமுவ**
திருமதி விமலா கன்னங்கரா (யூ என் பி) 9025

**ருவான்வெல்ல**
எச் ஜி சோமபந்து (எல் எஸ் எஸ் பி) 9883

**தெஹியோவிட்ட**
திருமதி சோமா விக்ரமநாயக்க (எல் எஸ எஸ பி) 6606

தொகுதி 32:
**அகலவத்தை**
வாக்காளர் தொகை: 34,009
அனில் முனசிங்க (எல். எஸ். எஸ். பி.) 12,007

**அம்பலாங்கொடை**
வாக்காளர் தொகை: 28,618
பி. எச். வில்லியம் டி சில்வா (எம் இ பி) 8716

**பத்தே கம**
வாக்காளர் தொகை: 32,178
நீல் டி. அல்விஸ [எல் எஸ் எஸ பி] 4871

**அம்பாறை**
வாக்காளர் தொகை: 19,535
டப்ளியூ. விஜயசிங்க (எஸ எல் எவ் பி) 4237
எம். எஸ். பக்மீவேவ (எம். ஈ. பி.) 3829
டி. பி. குணதிலக்க (யூ. என். பி.) 2962
ஏ. எஸ். டி. சில்வா (எல். எஸ். எஸ். பி.) 1577
கே. பி. அங்கி சிங்கோ (சு) 246
டப்ளியூ. ஏ. டேவிட் (எல். பி. பி.) 184
எச். எம். அப்புஹாமி (சு) 88
ஐ. சமரநாயக்க (சு) 80
மொத்தம் 13203
அதிகப்படி 408

**யப்பாகுவ**
வாக்காளர் தொகை: 24,393
ஆர். பி. தென்னகூன் [எஸ எல் எப் பி] 8536

**கோட்டே**
வாக்காளர் தொகை. 33,810
ஏ. நியதிஜெப்பால (யு. என். பி.) 8850

**கெக்கிராவ**
வாக்காளர் தொகை 13,922
எஸ பி லெனுவ எஸ எல் எப் பி 4590

**வென்னப்புவ**
வாக்காளர் தொகை 28,299
டபிள்யு ஐ ஹியு பெர்னுன்டோ எஸ எல் எப் பி 11043

**நத்தாண்டிய**
வாக்காளர் தொகை 26,787
சேர் அல்பட் எப் பீரிஸ யு என் பி 10914

**நிக்காவெரட்டியா**
வாக்காளர் தொகை 32,356
எம். தென்னக்கூன் (இ. சு. கா) 11409

**கொலன்னுவ**
வாக்காளர் தொகை: 26,754.
கே. இ. பெரேரா (எம். ஈ. பி.) 8608

**குளியாப்பிட்டிய**
வாக்காளர் தொகை: 31, 461
ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்லை [எஸ எம் பி] 8257

**எட்டியாந்தொட்டை**
டாக்டர் என் எம் பெரேரா எல் எஸ் எஸ் பி 10,432

**ஊவா பரணக்கடுவ**
திருமதி குசுமா ராஜரத்ன ஜே வி பி 4662

**மொறட்டுவா**
ஏம் ரஸ்கின் பெர்னுண்டோ யு ஏன் பி

**பிபிலே**
ஆர் ஏம குணசேகரா யு ஏன் பி

**மொனராகலை**
டபிள்யு ஏம் அல்பட்சில்வா ஏஸ ஏல் ஏப் பி

# காபந்து மந்திரி ஆர். ஈ. ஜயதிலக்காவும் தோற்ருர்

தொகுதி 87
**திருக்கோணமலை**
வாக்காளர் தொகை: 19,024

என். ஆர். இராஜவரோதயம் (த. அ. க.) 8872
ஆர். எம். ஜி. தாஸ்தகீர் (சு.) 1311
பியதாச அபயவீர (எல். எல். எப். பி.) 1265
ஸ்ரீ லால் குணரட்ண (எல். பி. பி.) 993
மொத்தம்: 12441
அதிகப்படி: 8565

தொகுதி 94
**நிந்தாவூர்**
வாக்காளர் தொகை: 21,084

அப்துல் மஜீத் (சு) 10,017
எம். எம். முஸ்தாபா (எல். பி .பி.) 5390
எம். எம். மிர்சா (சு) 2655
எஸ். காதர் [சு] 215
மொத்தம் 18277
அதிகப்படி ·4627

தொகுதி 80
**கோப்பாய்**
வாக்காளர் தொகை 27,859

எம். பாலசுந்தரம் (த. அ. க.) 10,279
ரி. குணரத்தினம் (த. கா.) 4936
எஸ். கே. நல்லதம்பி (சு) 3494
கே.வி.எஸ்.சண்முகநாதன் (எல். எஸ். எஸ். பி.) 1777
எஸ். பி. நடராஜா (ஸி.பி.) 458
எஸ்.சிவசுப்பிரமணியம்(சு) 192
மொத்தம்: 21136
அதிகப்படி: 5343

தொகுதி 81
**உடுப்பிட்டி**
வாக்காளர் தொகை 28,620

எம். சிவசிதம்பரம் (த.கா.) 7365
பி. கந்தையா (ஸி. பி.) 5427
ஆர். ஆர் தர்மரத்தினம் (எல். எஸ். எஸ். பி.) 4573
கே. ஜெயக்கொடி (த.அ.க.) 3860
மொத்தம்: 21225
அதிகப்படி: 1937

தொகுதி 63
**ஹபராதுவ**
வாக்காளர் தொகை: 32,732

பிரின்ஸ் குணசேகரா [எம் இ பி] 7217
டி. ஏ. பி. குணசேகரா [யு என் பி] 7100
டி. எஸ. குணசேகரா [எஸ எல் எப் பி] 4801
எ டி குணசேகரா [எல் பி பி] 2141
எம். கே. பியசேன [எல். எஸ. எஸ. பி.] 1165
பி. மலால்கொட [எஸ எம் பி] 1136
பி. சேனரட்ண (சு) 591
கே. குமாரசிங்கே 193
மொத்தம்: 24344
அதிகப்படி: 117

தொகுதி 114
**ஹொரவுபொத்தன**
வாக்களர் தொகை 14,274

ஈ எல் பி ஹுலுல்ல யு என் பி 5120
யு பி தஸநாயக்க எஸ் எல் எப் பி 4897
இ எம் திஸஸநாயக்க எல் எஸ எஸ பி 623
ஏ எல் எச் பி ஜயசூரிய எஸ எம் பி 259
டி பி என் யோட்தாட்ட எம் ஈ பி 216
மொத்தம் 11115
அதிகப்படி 223

தொகுதி 115
**மிஹிந்தலை**
வாக்காளர் தொகை 10,544

பி எம் கே தென்னக்கூன் எல் எஸ எஸ பி 2581
டபிள்யூ ஏ பி ஆரியதா [சு] 2154
கே பி புலங்குலம் யு என் பி 1797
ஏ எஸ கே திலகரத்ன சு 828
அசோகா ஜெரத்ன எம் ஈ பி 441
ஏ எஸ பண்டா சு 311
ஏ எம் கே முனவீர சு 188

மொத்தம 8300
அதிகப்படி 427

தொகுதி 44
**குண்டசாலை**
வாக்காளர் தொகை: 17,265

யு. பி. வை. ஜினதாச [எஸ. எல். எப். பி.] 7121
எஸ். பி. உடுறவான [யூ. என். பி.] 4438
சி. பி. தெஹிகம [எஸ. எம். பி.] 872
டி. சமரவிக்ரம [எல். பி. பி.] 558
கே.பி.கண்டேங்கும்புர [சு] 469
டபிள்யூ.டி.பி. காராளி யெட்டே [யு. பி.] 369
எச். டொன் சிரிநாயகா [எம். ஈ. பி.] 303
மொத்தம்: 14130
அதிகப்படி: 2683

தொகுதி 133
**ரம்புக்கன**
வாக்காளர் தொகை 26,522

என் எச் ஏ எம் கருணரட்ன எஸ எல் எப் பி 11,938
இ ரத்வத்தை யு என் பி 5644
ஜி விஜயதுங்க எல் எஸ எஸ பி 1815
எம் ஆர் யு பண்டா சு 898
ஜே டபிள்யூ கொடகே ஸி பி 512
சி ஆர் ரத்னயக்க இ த கா 471
மொத்தம் 21,278
அதிகப்படி 6294

தொகுதி 33:
**தம்புல்ல**
வாக்காளர் தொகை: 21,416

டி. பி. தென்னகூன் [எஸ். எல். எவ். பி.] 10,794
டி. பி. எல்லபொல [யு. என் . பி.] 3952
பி. வி. பி. குலதிலக்க [எல். எஸ். எஸ். பி.] 722
எல். டி பண்டா [எஸ். ஜே. எஸ்.] 527
எல் குலத்துங்க சு 302
டி எம் வறசவித்தான [எல். பி. பி. 296
எச். ஆரிய'சேன [எஸ். எம். பி.] 231
ஜி. டி. ரணவீர [சு] 228
உபாலி குலத்துங்க [எம். ஈ. பி.] 105
மொத்தம்: 17157
அதிகப்படி: 6842

தொகுதி 5
**வத்தலை**
வாக்காளர் தொகை 30,201

டி. ஷெல்டன் ஜயசிங்க (யு. என். பி.) 9665
டி. ஜே. வீரக்கொடி (எஸ். எல். எப். பி.) 5520
எஸ். மெண்டிஸ் எல் எஸ் எஸ் பி 3198
வி ராஜபக்ஸ எம் ஈ பி 2941
சி. எம். ஜயவர்த்தன (எல். பி. பி.) 1681
எல். டபிள்யு. பண்டித (ஸி. பி.) 571
ஏ. எஸ். ஜயமஹா (சு) 220
கே. ஜி. ஜயவீர (எஸ். ஜே. எஸ்.) 147
மொத்தம்: 23943
அதிகப்படி: 4145

தொகுதி 100
**வாரியப்பொல**
வாக்காளர் தொகை 29,197

ஏ. அதிகாரி [எஸ எல் எப் பி] 11,194
ஐவன் ரி. தஸ்ஸநாயக்க [யு என் பி] 9172
எல். ஆரியசிங்க [எல் எஸ எஸ் பி] 1078
பி. வித்தாரண [ஸி பி] 286
எஸ. எம். அபயசேகர [எல் பி பி] 271
எம் பி எச் ஜே விஜயவர்த்தன [எஸ எப் பி] 261
மொத்தம்: 22262
அதிகப்படி: 2022

தொகுதி 51
**நாவலப்பிட்டிய**
வாக்காளர் தொகை: 23,020

ஆர். எஸ. பெல்பொல [எஸ. எல். எப். பி.] 7200
டி. ஏ. கீர்த்திநந்த [யூ. என். பி.] 4545

ஆர். ஈ. ஜயதிலக்க [எல். பி. பி.] 2707
எஸ. மாரசிங்க [எல். எஸ. எஸ. பி.] 2198
பி. ஏ. டேவிட் பெரேரா [யூ. பி.] 776
எஸ. பொடி ராலாமி [எம் ஈ பி] 103
மொத்தம் 17529
அதிகப்படி 2655

தொகுதி 13:
**ஜாயல**
வாக்காளர் தொகை: 34,002

பாரிஸ் பெரேரா (யு. என். பி.) 11,960
ஓலிவர் ஜயசூரிய (எஸ். எல். எப். பி.) 8765
ஸ்டான்லி டி' சொய்சா (எல். பி. பி.) 4224
எட்வர்ட் டி. சில்வா (எல். எஸ். எஸ். பி.) 2331
மொத்தம் 27280
அதிகப்படி 2195

தொகுதி 101
**பிங்கிரியா**
வாக்காளர் தொகை 28,003

எல் பி ஜயசேன எஸ எல் எப் பி 6673
பி பி ஹேரத் குணரத்ன யு என் பி 6338
கே ஏ பெரேரா எம் ஈ பி 4885
ஆர் எம் ஜே ராஜகருண சு 3439
எச் எம் பி அப்புகாமி எஸ எம் பி 464
கே பி ஏ மௌனவை சு 464
எஸ ஏ கே அதிகாரி எல் பி பி 232
மொத்தம்: 22,495
அதிகப்படி: 335

தொகுதி 10
**மினுவாங்கொடை**
வாக்காளர் தொகை: 36,957

எம். பி. டி. சிரிவர்தன (எஸ். எல். எப். பி.) 11,565
எஸ். எப். டி. சில்வா (யு. என். பி.) 9311
ஹென்றி கருணரத்ன (எம். ஈ. பி.) 4430
டி. டி. விஜயதுங்க (எல். எஸ். எஸ். பி.) 1420
எம். பி. ஜயவர்தன (எல். பி. பி.) 723
டி. டி. ஜயசூரிய (எஸ். எம்.பி) 266
எம்.டி.ஆரியசிங்க (பி.பி.பி.) 184
மொத்தம் 27899
அதிகப்படி 2284

தொகுதி 11
**அத்தனகல**
வாக்காளர் தொகை: 35,783

ஜே. பி. ஒபயசேகரா (எஸ். எல். எப். பி.) 20,985
ஏ. டபிள்யு. ஜி. செனவிரத்ன (யு. என். பி.) 5668
கெமுனு குலசேகரா (எல். எஸ். எஸ். பி.) 1559
எம். விக்ரமசிங்க (சு) 254
மொத்தம் 28466
அதிகப்படி 15317

தொகுதி 24
**அவிசாவலை**
வாக்காளர் தொகை 33,589

பிலிப் குணவர்தன (எம். ஈ. பி.) 16,648
ஏ. ஜயவர்ன (யூ. என். பி.) 10,935
ஐ. ஜி. என். டி. ஜேகோபின் (எல். பி. பி.) 657
மொத்தம்: 27700
அதிகப்படி: 6253

தொகுதி 96
**புத்தளம்**
வாக்காளர் தொகை 17,736

எம். எச். எம். நைன மரிக்கார் (யு. என். பி.) 7344
எம். எஸ். அபூகீர் (சு) 2995
டபிள்யு பி. சி. பிரான்ஸிஸ பெரேரா (சு) 1850
எம். எஸ். எம். சாருக் (எல். எஸ். எஸ். பி.) 1670
டி. ஜி. பி. ஜோசப் எஸ எல் எப் பி 419
டி. ஜி. மென்டீஸ் (சு) 114

எம். ஏ. கூரே (சு) 94
மொத்தம்: 14486
அதிகப்படி 4349

தொகுதி 90
**மட்டக்களப்பு**
(இரு பிரதிநிதிகள்)
வாக்காளர் தொகை: 37,832

சி. இராசதுரை (த. அ. க.) 28,309
ஏ. எச். மாக்கன் மார்க்கர் (சு) 22,893
டி. மயில்வாகனம் (சு) 8241
மொத்தம் 59,443
அதிகப்படி 5416

தொகுதி 47
**வலப்பனை**
வாக்காளர் தொகை: 15,686

டி. பி. எம். ஹேரத் [எஸ எல் எப் பி] 5727
எம். பி. சமரக்கூன் [யூ என் பி] 2874
எம். ஜே. வீரசிங்க [எல் பி பி] 798
எஸ. டி. எஸ. குணதிலக்க [எல் எஸ எஸ பி] 603
எஸ. பி. கீர்த்தி சிங்க [சு] 571
டபிள்யூ. ஜி. ரத்னயக்கா [இ ஜ கா] 525
என். பி. பெத்தவெல [யூ பி] 498
டி. பி. சேனநாயக்க [சு] 86
மொத்தம்: 11.682
அதிகப்படி: 2583

தொகுதி 23
**ஹோமகம**
வாக்காளர் தொகை: 32,452

காமினி ஜயசூரியா (யூ. என். பி.) 10,872
டி. எவ். வெலிகல (எம். ஈ. பி.) 10,217
வில்பிரட் சேனநாயக்கா (எல எஸ். எஸ். பி.) 5221
எச். பி. லியனகே (எல். பி. பி.) 280
எம். வி. பெரேரா (பி. ஆர். பி.) 129
மொத்தம்: 26719
அதிகப்படி; 655

தொகுதி 54
**மஸகெலியா**
வாக்காளர் தொகை: 15,450

டி. ஜே. ரணவீர [யூ. என். பி.] 4192
எச். ஜினதாச [எம். ஈ. பி.] 3031
ஜி. ஆரியதிலக்க [எல். எஸ. எஸ. பி.] 2256
வி. கே. வெள்ளையன் [இ. ஜ. கா.] 1349
ஆர். பி. கண்ணேவா [எஸ. எல். எப். பி.] 631
திருமதி எவ். வி. ஜயதிலக்க [எல். பி. பி.] 194
வை. எல். ஏ. சேனநாயக்க [ஸி. பி.] 121
பி. வெல்ஹென [சு] 114
பி. பி. பிள்ளை [இ. சு. கா.] 79
மொத்தம்: 11967
அதிகப்படி: 1161

தொகுதி 111
**தொடங்கஸலாந்தை**
வாக்காளர் தொகை: 24,503

ஏ யூ ரோமானிஸ யூ என் பி 7571

தொகுதி 84
**கிளிநொச்சி**
வாக்காளர் தொகை 13,991

ஏ. சிவசுந்தரம் (த. அ. க.) 3741
ஏ. சி. பொன்னம்பலம் (சு) 2582
பி. ஆறுமுகம் (சு) 1386
வி. ஆனந்தசங்கரி (எல். எஸ். எஸ். பி.) 1114
எஸ். சரவணமுத்து (சு) 136
மொத்தம்: 8959
அதிகப்படி: 1159

**திவுலாப்பிட்டிய**
வாக்காளர் தொகை: 32,755

பெர்சி ஜயக்கொடி (யு. என். பி.) 9509

**மிரிகம**
வாக்காளர் தொகை: 37,089

ஏ.இ. ஜயசிங்க (எஸ். எல். எப் பி.) 12427

**களனி**
வாக்காளர் தொகை 35,470.

ஜே. ஆர். ஜயவர்தன (யு. என். பி.) 10827

தொகுதி 95
**பொத்துவில்**
வாக்காளர் தொகை: 18,250

எம். ஏ. ஏ. மஜீத் (சு) 9874

தொகுதி 6
**நீர்கொழும்பு**
வாக்காளர் தொகை 32,569

டி. கியூ. பெர்ணண்டோ (யு. என். பி.) 11207

தொகுதி 21
**கெஸபேவ**
வாக்காளர் தொகை: 36,188.

சோமவீர சந்திரசிரி [எல். ஜே. பி.] 11115

தொகுதி 38
**அக்குறனை**
( இருபிரதிநிதிகள் )
வாக்காளர் தொகை 42,427

டி. எச். ஜயவிக்ரம. [எல். பி. பி.] 15856
ஏ. சி. எஸ. ஹமீது [யு. என். பி.] 15835

---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாவது செய்யுமா? பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அப்படிச் செய்தால் தமிழரசுக் கட்சியினரும் தங்கள் மனப்பான்மையைத் தளர்த்தலாமென்றும் கூறப்படுகிறது.

தமிழரசுக் கட்சி புதியநிலைக்குத் தக்கபடி, இராஜ தந்திரத்துடன் நடந்து, தமிழ் இனத்தின் சங்கடங்களைத் தீர்க்க எல்லா முறைகளையும் கைக்கொள்ள வேண்டுமென்றும் தன் மனத்துக்கு மாறில்லாமல் அரசாங்கத்துடன் இனி அதிக நல்லுறவு கொள்ள வேண்டுமென்றும் அப்பொழுதுதான் தமிழர் தலைதூக்க வழிபிறக்குமென்றும், தமிழ்மக்களிடையே கருத்து பொதுவாக அதிகரித்து வருகின்றது.

நேற்று தமிழரசுக் கட்சிப் புதிய எம். பிக்கள் யாழ்ப்பாணத்தில் கூடி, இனித் தாங்கள் எவ்வித வேலைமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென்பது பற்றி ஆலோசனை செய்தன. ரென்று அறிகிறேன்.

கொழும்பு மத்திய தொகுதி தேர்தலில் டாக்டர் கலீல் (யு. என். பி) திரு. பீட்டர் கெனமன் (சி.பீ.) திரு. பிரேமதாஸா (யு.என்.பி,) ஆகிய மூவரும் தெரிவு செய்யப் பட்டனர். இதனுல் யு. என். பி. கட்சி பலம் 50 க்கு உயர்ந்துள்ளது.

டாக்டர் கலீலுக்கு 32 ஆயிரம், பீட்டர் கெனமன் 30 ஆயிரம், பிரேமதாஸ 28 ஆயிரம் வாக்குகள் பெற்றனர்.

இ. தொ. காவைச் சேர்ந்த திரு. ஏ. அஸீஸ் உள்ளிட்டு பலர் கட்டுப்பணம் இழந்தனர். சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பாலா தம்புவுக்கு 20 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன.

பழைய பார்லிமெண்ட் மெம்பர்களில் 31 பேர் தோற்றனர். தகாவின் காபந்துமந்திரிசபையில். தகநாயக்கா, ஸ்டான்லி, ஆர். ஈ, முஸ்தபா, ராஸிக்பரீத் இவர்கள் அனைவரும் தோற்றுவிட்டனர். தகாவின் பிரஜாதந்திரவாதக் கட்சியில் 74 பேர் கட்டுப் பணம் இழந்தனர்.

**"சீக்கிரம் திரும்புவேன்"**

திரு தகநாயக்க தேர்தல் முடிவுதெரிந்ததும் நேற்று காலை கொழும்புவந்து கவர்னர்ஜெனரலிடம் தமது மந்திரி சபையின் ராஜினுமாவை சமர்பித்தார். அதைகவர்னர்ஜெனரல்ஒத்துக் கொண்டார்.

கவர்னர்ஜெனரலுக்கு நன்றி தெரிவித்தும், புதிய எம், பிக் தேச நன்மையையே முதன்மையாகக் கொள்ளவேண்டுமென்றும் கூறி, தாம் சீக்கிரம் அரசியல் அரங்குக்கு வந்து விடலாமென்று நம்பியிருப்பதாக திரு தகநாயக்கா விடுத்துள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மே[illegible] இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1960-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 21-ந் திகதி அச்சிட[illegible]ற்றது.